1973 டிசம்பர் 3]

*** 580 வினு—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், பெரியபாளேயம் பொதுப்பணித் துறை பயணியர் மாளிகையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பெரியபாளேயத்திலுள்ள பயணியர் விடுதியை விரிவுப்படுத்தும் செயற்குறிப்பு தற்பொழுது அரசிடம் இல்லே.

திரு. கா. வேழவேந்தன் : இந்தப் பெரியபாளேயத்தில் பெரிய அளவுக்குத் திருவிழாக்களும், முக்கியமான நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்ற நிலேமை இருப்பதினுல், அதிகாரிகளும், பயணியர்களும் அதிகமாக அங்கே செல்லுகிருர்கள். ஆகவே, மறுபரிசீலனே செய்து, ஒரு 'சூட்' இருக்கிற பயணியர் விடுதியிலே இரண்டு 'சூட்' டுகளே உருவாக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்தக் கிராமத்திற்கு மிக அருகாமையில் திருவள்ளூர், கும்முடிப்பூண்டி ஆகிய இடங்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் பயணியர் விடுதிகள் இருக்கின்ற காரணத்திஞல், அதை விரிவுபடுத்தும் யோசனே இல்லே.

வைகை அணேப்பகுதி ஊழியர்கள்

*** 581 வினு—திரு. நா. வெ. குருசாமி :** மாண்புமிகு பொதுப் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகை அணேப் பகுதியில் கார்டனில் வேலே செய்பவர்கள் 10 ஆண்டு காலமாக நிரந்தர ஊழியர்களாக இல்லாமல் இருக்கிருர்களா ?

(இ) ஆம் எனில், அவர்களே நிரந்தர ஊழியர்களாக ஆக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) ஆம். வைகை அணேப் பகுதியில் வேலே செய்யும் ஊழியர்களே நிரந்தரப்பள்ளி உரிமை பெறும் ஊழியர்களாக ஆக்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனேயில் தற்போது உள்ளது.